KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.60

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தமிழ் நாட்டுப்புற மரபுகளில் பெண்களின் அறிவும் தலைமுறைப் பரிமாற்றமும்

Women's Knowledge and Intergenerational Transmission in Tamil Folk Traditions

Dr.M.HEMALATHA[1,*iD], M.R.DEVIMEENAKSHI[2iD]

[1] Assistant Professor, Department of Tamil Vellalar college for Women (Autonomous), Thindal, Erode 12
[2] Assistant Professor, Department of Tamil Vellalar college for Women (Autonomous), Thindal,Erode 12
***Corresponding author:** Dr.M.HEMALATHA, hemapreethi1974@gmail.com
ORCID iD: Dr.M.HEMALATHA https://orcid.org/0009-0001-2269-1768 · M.R.DEVIMEENAKSHI https://orcid.org/0009-0000-0315-4118

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 5 November 2026
Accepted: 6 November 2026

Article ID
KIJTS-2026-0042

Peer review
Double-blind peer review

Keywords
Folk tradition
Women's knowledge
Intergenerational transmission
Lullaby
Folktale
Performing art
Proverb
Embodied knowledge
Indian Knowledge System

ABSTRACT

In Tamil folk traditions, women are not merely recipients of knowledge; they serve as the primary custodians who generate, preserve, and transmit it to successive generations. This paper examines how women's experiential knowledge is formed, expressed, and transferred across generations through four folk performance and oral genres: lullabies, folktales, performing arts, and proverbs. Utilizing descriptive, analytical, and cultural-psychological approaches, the study draws primary data from Tamil folk oral traditions—including those of the Kongu region—alongside printed folklore collections.

The research demonstrates that lullabies simultaneously transmit caregiving wisdom, kinship education, and emotional regulation; folktales rehearse problem-solving strategies through narrative characters; performing arts such as Kummi, Kolattam, and Mulaippari cultivate embodied practical knowledge through movement, rhythm, and repetition; and proverbs distill extensive experiential wisdom into concise expressions adaptable to varying contexts. By synthesizing these four domains, the paper proposes a four-stage knowledge-cycle model: "Creation – Expression – Transmission – Recontextualization." This framework establishes a theoretical basis for recognizing women's oral knowledge as a formal epistemic structure within the context of Indian Knowledge Systems (IKS).

How to cite this article: Dr.M.HEMALATHA, & M.R.DEVIMEENAKSHI (2026). தமிழ் நாட்டுப்புற மரபுகளில் பெண்களின் அறிவும் தலைமுறைப் பரிமாற்றமும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 687. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.60
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் நாட்டுப்புற மரபுகளில் பெண்கள் அறிவைப் பெறுபவர்களாக மட்டுமன்றி, அதனை உருவாக்கிச் சேமித்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் முதன்மை அறிவுக் காப்பாளர்களாகவும் விளங்குகின்றனர். இக்கட்டுரை தாலாட்டுப் பாடல்கள்,

நாட்டுப்புறக் கதைகள், நிகழ்த்துக் கலைகள், பழமொழிகள் ஆகிய நான்கு வழக்காற்றுக் களங்களின் வழியாகப் பெண்களின் அனுபவ அறிவு எவ்வாறு உருவாகிறது, வெளிப்படுகிறது, தலைமுறைகளுக்கிடையே பரிமாறப்படுகிறது என்பதை ஆராய்கிறது. விளக்கமுறை, பகுப்புமுறை, பண்பாட்டு உளவியல் அணுகுமுறை ஆகியவற்றை இணைத்து, கொங்குப் பகுதி உள்ளிட்ட தமிழ்நாட்டு வாய்மொழி வழக்காறுகளும் அச்சிடப்பட்ட நாட்டுப்புறத் தொகுப்புகளும் முதன்மைத் தரவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

தாலாட்டு பராமரிப்பு அறிவையும் உறவுமுறைக் கல்வியையும் உணர்வு ஒழுங்கமைவையும் ஒருசேரக் கடத்துகிறது; நாட்டுப்புறக் கதை சிக்கல் தீர்க்கும் உத்திகளைக் கதைமாந்தர் வழியாக ஒத்திகை பார்க்கச் செய்கிறது; கும்மி, கோலாட்டம், முளைப்பாரி போன்ற நிகழ்த்துக் கலைகள் அசைவு, தாளம், மீள்பயிற்சி வழியாக உடலில் பதியும் செய்முறை அறிவை உருவாக்குகின்றன; பழமொழி நீண்ட அனுபவத்தை ஒரு வரியில் செறிவாக்கிச் சூழலுக்கேற்பப் பயன்படுத்தவும் மறுபொருளாக்கவும் இடமளிக்கிறது. இந்நான்கு களங்களையும் இணைத்து, “உருவாக்கம் – வெளிப்பாடு – பரிமாற்றம் – மறுபொருளாக்கம்” என்ற நான்கு நிலை அறிவுச் சுழற்சி மாதிரியை இக்கட்டுரை முன்வைக்கிறது. இம்மாதிரி இந்திய அறிவு மரபின் (Indian Knowledge Systems) தமிழ்ச் சூழலில் பெண்களின் வாய்மொழி அறிவை முறையான அறிவு வடிவமாக அங்கீகரிப்பதற்கான கோட்பாட்டுச் சட்டகமாக அமைகிறது.

திறவுச் சொற்கள்: நாட்டுப்புற மரபு, பெண்களின் அறிவு, தலைமுறைப் பரிமாற்றம், தாலாட்டு, நாட்டுப்புறக் கதை, நிகழ்த்துக் கலை, பழமொழி, உடல்சார் அறிவு, இந்திய அறிவு மரபு

1. முன்னுரை

ஒரு சமூகத்தின் அறிவு அதன் நூலகங்களில் மட்டும் இல்லை; அதன் அடுக்களைகளிலும் தொட்டில்களிலும் வயல்வரப்புகளிலும் திண்ணைகளிலும் அது வாழ்கிறது. தமிழ்ச் சமூகத்தில் இத்தகைய அன்றாட அறிவின் பெருங்காப்பாளர்களாகப் பெண்கள் தலைமுறை தலைமுறையாக விளங்கி வந்துள்ளனர். குழந்தையைத் தூங்க வைக்கும் தாலாட்டில் உறவுமுறையும், இரவுக் கதையில் அறமும் சாமர்த்தியமும், கும்மியின் கைத்தட்டலில் கூட்டுணர்வும், ஒரு பழமொழியில் வாழ்நாள் அனுபவமும் கடத்தப்படுகின்றன.

தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் நெடுங்காலமாகத் தொகுப்பு, வகைப்பாடு, இலக்கியந்யம் ஆகியவற்றில் கவனம் செலுத்தின. கி. வா. ஜகந்நாதன், நா. வானமாமலை போன்றோரின் தொகுப்புகள் நாட்டுப்பாடல்களைச் செவ்வியல் பாடல்களுக்கு இணையான ஆய்வுப் பொருளாக நிறுவின. ஆனால் இவ்வழக்காறுகளைப் பெண்களின் “அறிவு” என்ற நோக்கில், அதாவது சரிபார்க்கக்கூடிய, பயன்படுத்தக்கூடிய, கற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு

அறிவுமுறையாகப் பார்க்கும் முயற்சிகள் குறைவு. பெரும்பாலான ஆய்வுகள் பெண்களை உணர்வு வெளிப்பாட்டாளர்களாகவோ, அடக்குமுறையின் பாதிப்பாளர்களாகவோ மட்டுமே சித்திரித்தன; அவர்கள் அறிவை உருவாக்கும் செயலாளர்கள் (epistemic agents) என்ற பார்வை இன்னும் வலுவாக வளரவில்லை.

இந்தியாவின் தேசியக் கல்விக் கொள்கை 2020 இந்திய அறிவு மரபுகளைக் கல்வியிலும் ஆய்விலும் இணைக்க வேண்டும் என வலியுறுத்திய பின்னர், இந்திய அறிவு மரபு பற்றிய உரையாடல் பெரும்பாலும் சமஸ்கிருத நூல் மரபை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. ஆனால் இந்திய அறிவு மரபு பலமொழி, பல்லிறைமை கொண்டது; அதில் தமிழின் செவ்வியல் மரபும் வாய்மொழிம் மரபும் தனித்தனியான இடம் பெறுகின்றன. அவ்வாய்மொழி மரபின் ஒரு பெருபகுதியைப் பெண்களே உருவாக்கினர், காத்தனர் என்பதை கணக்கில் கொள்ளாமல் இந்திய அறிவு மரபு பற்றிய சித்திரம் முழுமையடையாது.

இச்சூழலில் இக்கட்டுரை நான்கு வாய்மொழிக் களங்களைத் தெரிவு செய்கிறது: தாலாட்டுப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நிகழ்த்துக் கலைகள், தமிழ்ப் பழமொழிகள். இவை நான்கும் வெவ்வேறு அறிவுவகைகளைக் குறிக்கின்றன உணர்வுசார் பராமரிப்பு அறிவு, கதைசார் சிந்தனை அறிவு, உடல்சார் செய்முறை அறிவு, செறிவான மொழிசார் அறிவு. இவற்றை ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது ஒரு பெண்ணின் வாழ்நாள் முழுவதும் விரியும் ஒரு கல்விப் பாதை வெளிப்படுகிறது: தொட்டிலில் தாலாட்டைக் கேட்கும் குழந்தை, திண்ணையில் பாட்டியின் கதைக்குச் செவிமடுக்கும் சிறுமி, கும்மி வட்டத்தில் இணையும் இளம்பெண், பழமொழியால் அறிவுரை கூறும் மூத்த பெண் இவை ஒரே அறிவுச் சங்கிலியின் வெவ்வேறு கண்ணிகள்.

2. ஆய்வு நோக்கங்களும் ஆய்வு முறையியலும்

2.1 ஆய்வு நோக்கங்கள்

1. தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் பெண்களின் பராமரிப்பு அறிவையும் குழந்தை வளர்ப்பு குறித்த பண்பாட்டு எதிர்பார்ப்புகளையும் அடையாளப்படுத்துதல்.
2. நாட்டுப்புறக் கதைகளில் பெண் பாத்திரங்களின் சிக்கல் தீர்க்கும் உத்திகளையும் கதைசொல்லும் சூழலின் கற்றல் தன்மையையும் பகுப்பாய்தல்.
3. நிகழ்த்துக் கலைகளில் அசைவு, தாளம், பயிற்சி வழியாகக் கடத்தப்படும் உடல்சார் அறிவின் தன்மையை விளக்குதல்.
4. பழமொழிகளில் செறிந்துள்ள அனுபவ அறிவு, அதன் சூழல்சார் பயன்பாடு, தலைமுறைகளின் மறுபொருளாக்கம் ஆகியவற்றை ஆராய்தல்.
5. நான்கு களங்களையும் இணைத்து, இந்திய அறிவு மரபின் தமிழ்ச் சூழலில் பெண்களின் அறிவுப் பரிமாற்றத்துக்கான ஒருங்கிணைந்த மாதிரியை முன்மொழிதல்.

2.2 ஆய்வு வினாக்கள்

- பெண்களின் அனுபவ அறிவு எந்தச் சூழல்களில் உருவாகிறது? அது எந்த வடிவங்களில் வெளிப்படுகிறது?
- ஒவ்வொரு வழக்காறும் எந்தக் கற்றல் முறையின் வழியாக அடுத்த தலைமுறைக்கு அறிவைக் கடத்துகிறது?
- சமகால மாற்றங்களின் நடுவே இவ்வறிவு எவ்வாறு மறுபொருள் கொள்ளப்படுகிறது?

2.4 ஆய்வுக் களமும் மையப்பொருளும்

அட்டவணை 1. ஆய்வுக் களங்களும் ஆராய வேண்டிய மையப்பொருளும்

ஆய்வுக் களம்	ஆராய வேண்டிய மையப்பொருள்
தாலாட்டுப் பாடல்கள்	பெண்களின் பராமரிப்பு அறிவு, உணர்வு வெளிப்பாடு, குழந்தை வளர்ப்பு குறித்த பண்பாட்டு எதிர்பார்ப்புகள்
நாட்டுப்புறக் கதைகள்	பெண்களின் சிக்கல் தீர்க்கும் திறன், வாழ்வியல் அனுபவம், கதைவழி அறிவுப் பரிமாற்றம்
நிகழ்த்துக் கலைகள்	அசைவு, தாளம், பயிற்சி ஆகியவற்றின் வழியாகப் பெறப்படும் உடல்சார் அறிவு
தமிழ்ப் பழமொழிகள்	அனுபவ அறிவின் சுருக்கம், சூழலுக்கேற்ற பயன்பாடு, தலைமுறைகளின் மறுபொருளாக்கம்

2.5 ஆய்வு வரம்பு

இக்கட்டுரை நான்கு வழக்காறுகளின் மாதிரிச் சான்றுகளையே ஆய்கிறது; முழுமையான தொகுப்பு அல்லது புள்ளியியல் அளவீடு இதன் நோக்கம் அன்று. ஒப்பாரி, நடவுப் பாடல் போன்ற தொடர்புடைய வகைமைகள் ஒப்பீட்டுக்கு மட்டுமே குறிப்பிடப்படுகின்றன.



Fig 1: அன்றாட அறிவின் பெருங்காப்பாளர்கள்: தமிழ்ப் பெண்களின் வாய்மொழி மரபுகள்

இப்படப்படம் தமிழ்ப் பெண்களின் தலைமுறை சார்ந்த அறிவை விளக்குகிறது. தாலாட்டு மூலம் உறவுமுறையையும், கதை மூலம் அறத்தையும், கும்மி மூலம் கூட்டுறவையும், பழமொழி மூலம் அனுபவத்தையும் அவர்கள் கடத்துகின்றனர். இந்த வாய்மொழி மரபுகள் அவர்களின் வாழ்நாள் முழுவதும் விரியும் ஒரு கல்விப் பாதையாக அமைகின்றன.

3. கோட்பாட்டுப் பின்புலம்: இந்திய அறிவு மரபின் தமிழ்ச் சூழலில் பெண்களின் அனுபவ அறிவு

3.1 அனுபவ அறிவு: வரையறை

அனுபவ அறிவு என்பது நேரடி வாழ்வின் தொடர் ஈடுபாட்டால் உருவாகி, திரும்பத் திரும்பச் சோதிக்கப்பட்டு, சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் அறிவு. இது ஆய்வகத்தில் உருவாகும் அறிவிலிருந்து முறையால் மாறுபட்டது; ஆனால் அதன் நம்பகத்தன்மையைக் குறைந்ததாக கருத இயலாது. பொலான்யி (Polanyi, 1966) “நாம் சொல்லக்கூடியதை விட அதிகம் அறிகிறோம்” என்ற கருத்தின் வழியே உள்ளார்ந்த அறிவை வரையறுத்தார். சமையலில் “கைப்பக்குவம்”, மருத்துவத்தில் “கைமருந்து”, வேளாண்மையில் “பட்டம்” பார்க்கும் திறன் ஆகியவை தமிழ்ப் பெண்களின் இத்தகைய உள்ளார்ந்த அறிவுக்குச் சான்றுகள்.

பெலென்கி முதலானோர் (Belenky et al., 1986) பெண்கள் அறிவைப் பெறும் வழிகளில் “இணைந்து அறிதல்” (connected knowing) என்ற முறையை அடையாளம் கண்டனர்; அதாவது பிறரின் அனுபவத்தைப் புரிந்துகொண்டு, உறவுகளின் வழியே அறிவைக் கட்டமைத்தல். தமிழ் நாட்டுப்புற மரபில் இது மிகத் தெளிவாகத் தெரிகிறது: தாய்,

பாட்டி, அத்தை, அக்கா, அண்டை வீட்டுப் பெண்கள் ஆகியோர் ஒரு வலையமைப்பாக அறிவைப் பகிர்ந்துகொள்கின்றனர்.

3.2 தமிழ் மரபில் வாய்மொழி அறிவின் இடம்

தமிழின் முதல் இலக்கணமான தொல்காப்பியமே வாய்மொழி வடிவங்களை அறிவுவடிவங்களாக அங்கீகரிக்கிறது. செய்யுளியலில் இடம்பெறும் "பிசி" (விடுகதை), "முதுமொழி" (பழமொழி), "பண்ணத்தி" (பாட்டிடைக் கலந்த நாட்டுப்புற வடிவம்) ஆகியவை இதற்குச் சான்றுகள். முதுமொழியை வரையறுக்கும் நூற்பா:

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப
(தொல்காப்பியம், செய்யுளியல்)

நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை, மென்மை, ஏது (காரணம்) ஆகிய ஐந்து பண்புகளைக் கொண்டதே முதுமொழி என்ற இவ்வரையறை இன்றைய அறிவார்ந்த வரையறைகளுக்கு இணையானது. அதாவது பழமொழி ஒரு அழகியல் வடிவம் மட்டுமல்ல; காரணம் காட்டிக் குறித்த பொருளை முடித்துவைக்கும் ஒரு நிறுவல் முறையும் ஆகும். வள்ளுவரும் "கற்றில னாயினும் கேட்க" (குறள் 414) என்று கேள்வியை அதாவது செவிவழியான அறிவை எழுத்தறிவுக்கு இணையாக மதிக்கிறார். கேள்வி மரபின் அன்றாடக் களம் வீடும் அதனை நடத்தும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண்களும் ஆவர்.

3.3 இந்திய அறிவு மரபு: நூல்மரபும் வாழ்வுமரபும்

இந்திய அறிவு மரபு பற்றிய அண்மைக்கால பாடநூல்கள் (Mahadevan et al., 2022) அறிவு மரபுகளைத் தத்துவம், அறிவியல், கலை, வாழ்வியல் எனப் பலதுறைகளாகவும், அவற்றின் பரிமாற்றத்தை குரு–சீட மரபாகவும் விவரிக்கின்றன. இந்தச் சட்டகத்தில் வீடு என்பது ஒரு பள்ளியாகவும், தாய் முதல் குருவாகவும் காணப்படுகிறாள் "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்ற வரிசை இதனைக் காட்டுகிறது. ஆயினும் இந்திய அறிவு மரபு பற்றிய பொதுச் சொல்லாடல் நூல்மரபு (சாஸ்திரம்) மீது கூடுதல் கவனம் செலுத்துகிறது; மக்கள் வாழ்வில் நிலைத்த "லோக" மரபு ஒரு இணைநிலையான அறிவுச் சென்றுகாளம் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

இதன்படி, தமிழ்ச் சூழலில் பெண்களின் அறிவை மூன்று அடுக்குகளாகப் பார்க்கலாம்:

1. **சொல்வடிவ அறிவு** — பாடல், கதை, பழமொழி, விடுகதை ஆகியவற்றில் மொழியாக வெளிப்படுவது.
2. **உடல்வடிவ அறிவு** — அசைவு, தாளம், கைவண்ணம், செய்முறை ஆகியவற்றில் பதிந்திருப்பது; பொர்டியூ (Bourdieu, 1977) கூறும் "பழக்கமைவு" (habitus), கானர்டன்

(Connerton, 1989) கூறும் "உடல்பால் இணைந்த நினைவு" (incorporated memory) ஆகியவற்றோடு இது ஒத்துப் போகிறது.

3. **உறவுவடிவ அறிவு** — யார், யாரிடம், எப்பொழுது, எவ்வாறு கற்றுக்கொடுக்கிறார் என்ற கற்றல் வலையமைப்பில் நிலைத்திருப்பது; விகோட்ஸ்கி (Vygotsky, 1978) கூறும் சமூகவழிக் கற்றல் இதன் அடிப்படை.

இம்மூன்று அடுக்குகளும் அடுத்துவரும் நான்கு களங்களிலும் வெவ்வேறு அளவில் இடம்பெறுகின்றன.

4. தாலாட்டுப் பாடல்கள்: பராமரிப்பு அறிவும் குழந்தை வளர்ப்பின் பண்பாட்டு உளவியலும்

தாலாட்டு என்பது குழந்தையைத் தூங்கவைக்கும் பாடல் மட்டுமல்ல; அது தாயின் அறிவு, உணர்வு, சமூக எதிர்பார்ப்பு மூன்றும் சந்திக்கும் ஒரு பண்பாட்டுச் செயல். "தால்" (நாக்கு) + "ஆட்டு" என்ற சொல்லாக்கமே, நாவை அசைத்து எழுப்பும் ஒலியும் தொட்டிலின் அசைவும் இணைவதைக் குறிக்கிறது. "ஆராரோ ஆரிரரோ" என்ற பொருளற்ற ஒலியடுக்கு குழந்தையின் செவிக்கு ஒரு நிலையான தாளத்தை வழங்குகிறது; இடையே வரும் வரிகள் தாயின் அகவுலகத்தை வெளிப்படுத்துகின்றன.

4.1 பராமரிப்பு அறிவும் உடல் ஒழுங்கும்

தாலாட்டின் முதல் அறிவு அதன் தாளத்தில் உள்ளது. தொட்டிலின் ஆட்டமும் பாடலின் மெதுவான ஓட்டமும் ஒன்றுக்கொன்று இசைந்து, குழந்தையின் அழுகையைத் தணித்து உறக்கத்தை நோக்கி நகர்த்தும் முறையைத் தாய்மார் அனுபவத்தால் கண்டறிந்தனர். குழந்தை அமைதியடையும்போது குரலைத் தாழ்த்துவதும், மீண்டும் அழும்போது வரிகளைத் தொடர்வதும் ஒரு நுட்பமான பின்னூட்டச் செயல்முறை (feedback practice) ஆகும். இதனை எவரும் எழுதிக் கற்றுக்கொடுப்பதில்லை; இளம்தாய் தன் தாயோ மாமியாரோ பாடுவதைக் கேட்டும் பார்த்தும் இதனைக் கற்கிறாள்.

தாலாட்டுகளில் இடம்பெறும் பொருட்கள் — பால், தேன், மல்லிகை, சந்தனம், மஞ்சள், வெள்ளிக் கிண்ணம், மொழிவிளக்குச் செய்யாத பாலாடை — குழந்தைப் பராமரிப்பின் பொருள்சார் உலகத்தைக் காட்டுகின்றன. சில வட்டாரத் தாலாட்டுகளில் உரைமருந்து, காப்புக் கட்டுதல், கண்ணேறு கழித்தல் போன்ற வீட்டு மருத்துவ–சடங்குகளும் குறிப்பிடப்படுகின்றன. இவை அறிவியல் சார்ந்த மருத்துவ அறிவுரைகள் அல்ல; ஆனால் ஒரு சமூகம் குழந்தையின் உடலைப் பற்றிக் கொண்டிருந்த கவனத்தையும் கவலையையும் பதிவு செய்யும் ஆவணங்கள்.

4.2 உறவுமுறைக் கல்வி: தாய்மாமன் மையம்

தமிழ்த் தாலாட்டுகளின் தனித்தன்மையான கூறு தாய்மாமன் புகழ்ச்சி. குழந்தையை அழவைத்தவர் யார் என்று வினவும் வரிகள் "ஆரடிச்சு நீ அழுதே, அடிச்சாரைச் சொல்லி அழு", "மாமன் அடிச்சாரோ மல்லிகைப் பூச்செண்டாலே" பல வட்டார வடிவங்களில் கிடைக்கின்றன. இவ்வரிகளில் மாமன், அத்தை, பாட்டன், அண்ணன்

என ஒவ்வொரு உறவும் ஒரு செயலோடும் பரிசோடும் இணைக்கப்படுகிறது. குழந்தை மொழியை உணரும் முன்பே, தன்னைச் சுற்றியுள்ள உறவு வலையமைப்பின் ஒலிச்சித்திரத்தைப் பெறுகிறது.

மாமன் கொண்டுவரும் சீர் தொட்டில், கால் தண்டை, அரைமுடி, பட்டுச் சட்டை என நீளும் பட்டியல், தாய்வழிச் சுற்றத்தின் பொறுப்பையும் மதிப்பையும் அறிவிக்கிறது. திராவிக் (Trawick, 1990) தமிழ்க் குடும்பத்தின் அன்பு என்ற கருத்தாக்கத்தை ஆராய்ந்தபோது, உறவுமுறைகளை அன்பின் அன்றாட மொழியாகவும் செயலாகவும் கண்டார். தாலாட்டு அந்த மொழியின் முதல் பாடம் எனலாம்.

4.3 உணர்வு வெளிப்பாடு: தாயின் அகக் குரல்

தாலாட்டு குழந்தைக்காகப் பாடப்பட்டாலும், அதன் உண்மையான கேட்பவள் பல வேளைகளில் தாயே. புகுந்த வீட்டின் சுமை, பிறந்த வீட்டின் நினைவு, கணவனின் தொலைவு, வறுமையின் கவலை ஆகியவை குழந்தையைத் திரையாகக் கொண்டு வெளிப்படுகின்றன. இதனால் தாலாட்டு ஒரு உணர்வு ஒழுங்கமைவுக் கருவியாக (emotional self-regulation) இரட்டைப் பணியாற்றுகிறது: குழந்தையை அமைதிப்படுத்தும் அதே வேளையில் தாயின் மனச்சுமையையும் இறக்குகிறது. ஒப்பாரியைப் போலவே, தாலாட்டும் பொதுவெளியில் சொல்ல இயலாதவற்றைச் சொல்லும் ஒரு அனுமதிக்கப்பட்ட இடமாக விளங்கியது (Clark-Decès, 2005).

4.4 குழந்தை வளர்ப்பின் பண்பாட்டு எதிர்பார்ப்புகள்

தாலாட்டுகள் குழந்தையின் எதிர்காலத்தையும் பாடுகின்றன: ஆண் குழந்தை ஏர் உழுவான், அவையில் வீற்றிருப்பான்; பெண் குழந்தை வீட்டை விளக்குவாள், நல்ல இடத்தில் வாழ்க்கப்படுவாள். இதில் பாலினம்சார் பங்குகளின் முன்மாதிரி தெளிவாகத் தெரிகிறது; இதனை விமர்சனத்துடன் பார்க்க வேண்டும். அதே வேளையில், வீரம், கல்வி, ஈகை, மூத்தோரை மதித்தல் போன்ற மதிப்புகள் இரு பாலாருக்கும் வாழ்த்தாகக் கூறப்படுகின்றன.

பண்பாட்டு உளவியல் நோக்கில், தாலாட்டு குழந்தையின் முதல் சுயச் சித்திரத்தை (self-image) வடிவமைக்கிறது. “கண்ணே”, “மணியே”, “மரகதமே” என அழைக்கப்படும் குழந்தை, தான் மதிப்புமிக்கவன்/ள் என்ற உணர்வை ஒலியின் வழியே உள்வாங்குகிறது. இவ்வாறு தாலாட்டு பாதுகாப்புணர்வு, உறவுச் சார்பு, சமூக அடையாளம் ஆகிய மூன்றையும் ஒரே நேரத்தில் குழந்தையின் உள்ளத்தில் நடுகிறது.

4.5 தலைமுறைப் பரிமாற்றம்

தாலாட்டின் பரிமாற்றம் இரட்டை வழியானது. குழந்தை அதனைக் கேட்டு மொழியையும் தாளத்தையும் உறவையும் பெறுகிறது; அருகிலிருக்கும் இளம் பெண்கள் — அக்கா, அத்தை மகள் — அதனைக் கேட்டுப் பாடவும் பாடலை மாற்றியமைக்கவும் கற்கின்றனர். தாலாட்டு நிலையான பாடம் அன்று; ஒவ்வொரு தாயும் தன் ஊரின் பெயர், குலத்தெய்வம், மாமனின் தொழில் என புதிய வரிகளைச்

சேர்க்கிறாள். இந்த முறையில் தாலாட்டு வாய்மொழியின் என்றும் தொடரும் ஆக்கத்திறனைக் (oral-formulaic composition) காட்டுகிறது.



Fig 2: தமிழ்ச் சூழலில் பெண்களின் அனுபவ அறிவு

இப்படம் தமிழ்ப் பெண்களின் அனுபவ அறிவு, தொல்காப்பிய வாய்மொழி மரபுகள், இந்திய அறிவு மரபுகள் மற்றும் தாலாட்டுப் பாடல்கள் ஆகிய நான்கு முக்கியக் களங்களை விளக்குகிறது. அன்றாட வாழ்வியல் திறன்கள், உறவுமுறைப் பகிர்வு, மற்றும் தாய்வழி கற்றல் முறைகள் வழியாக தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் பெண்களின் அறிவுச் செல்வத்தை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

5. நாட்டுப்புறக் கதைகள்: கதைவழிக் கற்றலும் சிக்கல் தீர்க்கும் திறனும்

நாட்டுப்புறக் கதை ஒரு சமூகத்தின் “கற்பனைச் சோதனைக்கூடம்” ஆகும். வாழ்வில் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்களைக் கதைமாந்தர்கள் முன்னரே சந்திக்கின்றனர்; கேட்பவர் அவற்றைத் தீர்க்கும் வழிகளை ஆபத்தின்றிக் கற்றுக்கொள்கின்றனர். ப்ரூனர் (Bruner, 1986) கூறும் “கதைமுறைச் சிந்தனை” (narrative mode of thought) இதற்குரிய கோட்பாட்டு அடிப்படை; மனிதர் நோக்கம், செயல், விளைவு ஆகியவற்றைக் கதைச் சங்கிலிகளாகவே புரிந்துகொள்கின்றனர்.

5.1 கதைசொல்லும் சூழல்: பாட்டியும் திண்ணையும்

தமிழ் நாட்டுப்புறக் கதையின் மரபான சூழல் — இரவு, திண்ணை, நிலவொளி, பாட்டியின் மடி. கதைசொல்லி மூத்த பெண்; கேட்பவர் வெவ்வேறு வயதுக் குழந்தைகள். கதை ஒவ்வொரு முறையும் கேட்பவரின் வயதுக்கும் அன்றைய நிகழ்வுக்கும் ஏற்ப மாறுகிறது; குழந்தைகள் “அப்புறம்?” என்று கேட்கும் இடைமறிகள் கதையை ஒரு உரையாடலாக மாற்றுகின்றன. இது விகோட்ஸ்கி கூறும் “அண்மை

வளர்ச்சி மண்டலம்" (zone of proximal development) விளக்கத்துக்கு ஏற்ற ஒரு கற்றல் சூழல்: மூத்தவர் குழந்தையின் புரிதலுக்கு ஒரு படி மேலே நின்று வழிநடத்துகிறார்.

5.2 பெண்களின் சிக்கல் தீர்க்கும் திறன்

ஏ.கே. இராமானுஜன் (Ramanujan, 1991) பெண்கள் சொல்லும் கதைகள் ஆண்மைய இதிகாசக் கதைகளிலிருந்து மாறுபட்ட ஒரு "எதிர்முறை" (counter-system) என்று காட்டினார். இத்தகைய கதைகளில் கதைநாயகி மீட்கப்படுபவள் அல்லள்; தன் அறிவால் தன்னையும் குடும்பத்தையும் மீட்பவள். தமிழ்ச் சூழலில் இதற்கு மூன்று வகைமாதிரிகளைக் காணலாம்:

1. **மதிநுட்பமுள்ள மருமகள் கதைகள்** — மாமனார் வைக்கும் புதிர்களையும் சோதனைகளையும் கூர்மையான அறிவால் வெல்லும் மருமகள். இவை புகுந்த வீட்டில் ஒரு இளம்பெண் தன் இடத்தைத் தேடும் உத்திகளைக் கற்பிக்கின்றன.
2. **சிறுவிலங்குக் கதைகள்** — "காக்கா வீடு சாணி வீடு, குருவி வீடு மெழுகு வீடு" போன்ற கதைகள் மழை, வீடுகட்டும் பொருள், முன்முன்னறிவு, உதவியின் எல்லை ஆகியவற்றை எளிய சிறுவர் மொழியில் கற்பிக்கின்றன. "பாட்டி வடை சுட்ட கதை" ஏமாற்றும் புகழ்ச்சிக்கு எதிரான எச்சரிக்கையை வழங்குகிறது.
3. **துயரக் கதைப்பாடல்கள்** — "நல்லதங்காள் கதை" போன்றவை வறுமை, உறவுமுறிவு, கைவிடப்படுதல் ஆகிய அனுபவங்களைப் பதிவு செய்கின்றன. இவை தீர்வைக் காட்டாமல், சமூகம் காணாமல் விடும் தொலைவுகளைக் காட்டும் "எதிர்மறை அறிவு" (negative knowledge) ஆகும்.

மூன்றாம் வகை முக்கியமானது: கதை வெற்றிகரமான தீர்வை மட்டும் அன்றி, தோல்வியின் விலையையும் கற்பிக்கிறது. கேட்கும் பெண்கள் அதில் தங்கள் அனுபவத்தைக் கண்டு, அதனைப் பெயரிட்டுச் சொல்லும் மொழியைப் பெறுகின்றனர்.

5.3 கதைவழி அறிவுப் பரிமாற்றத்தின் இயங்குமுறை

கதைவழிப் பரிமாற்றம் நான்கு கூறுகளால் நிகழ்கிறது. முதலாவது, **நினைவுத் தாங்கிகள்** — மூன்று சகோதரர், ஏழு கடல், மூன்று சோதனை போன்ற மீள்வரும் அமைப்புகள் கதையை நினைவில் நிறுத்துகின்றன. இரண்டாவது, **உணர்வுப் பிணைப்பு** — சொல்லுபவரின் மீதான அன்பு கதையின் அறத்தை ஏற்கச் செய்கிறது. மூன்றாவது, **மறைமுகக் கற்பித்தல்** — கதை நேரடியாகக் கட்டளையிடாமல், கேட்பவரே நீதியைக் கண்டடையும் வாய்ப்பைத் தருகிறது. நான்காவது, **மறுசொல்லல்** — கதை கேட்ட சிறுமி பின்னாளில் தன் குழந்தைக்குச் சொல்லும்போது, தன் காலத்தின் சிக்கல்களை அதில் நுழைக்கிறாள்.

லூர்து (1997) குறிப்பிடுவதுபோல, நாட்டார் வழக்காறு அதன் செயல்பாட்டால் வாழ்கிறது; செயல்பாடு மாறும்போது வடிவமும் மாறுகிறது. இன்று பாட்டியின் கதை கைப்பேசி அழைப்பில், காணொளியில், பள்ளியின் கதைச்சொல்லல் நேரத்தில் தொடர்வது இதன் தகவமைவுத் திறனுக்குச் சான்று.

6. நிகழ்த்துக் கலைகள்: உடல்சார் செய்முறை அறிவு

சில அறிவுகளைச் சொல்லிக் கொடுக்க இயலாது; செய்துகாட்டித்தான் கற்றுக்கொடுக்க முடியும். "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற பழமொழியே இதுவரை தமிழ் மரபு உடல்சார் அறிவை எவ்வாறு மதித்தது என்பதற்குச் சான்று: பழக்கம் என்பது உடல் நினைவில் பதிவாகும் அறிவு. நிகழ்த்துக் கலைகளில் பெண்கள் பெறும் அறிவு இத்தகையது.

6.1 கும்மி: வட்டமும் கூட்டுணர்வும்

கும்மி பெண்களின் மிகப் பரவலான கூட்டுக் கலையாகும். வட்டமாக நின்று, கைதட்டி, குனிந்து நிமிர்ந்து, முன்பாட்டுக்காரி எடுத்துக்கொடுக்கும் வரியைக் குழு திரும்பப் பாடும் முறை இதன் அடிப்படை. இந்த வடிவமைப்பில் மூன்று அறிவுகள் ஒருசேரக் கற்றுக்கொள்ளப்படுகின்றன: தாளத்திற்கு ஏற்ற அடியும் கையும் இணையும் உடல்வியல் ஒத்திசைவு; முன்பாட்டுக்காரியைக் கேட்டு திரும்பச் சொல்லும் மொழிநினைவு; வட்டத்தில் ஒவ்வொருவரும் மற்றவரைப் பார்த்து அசைவை ஒத்திசைக்கும் கூட்டுணர்வு.

கொங்குப் பகுதியின் வள்ளிக் கும்மி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. வள்ளி–முருகன் கதையைப் பாடலாகவும் அசைவாகவும் நிகழ்த்தும் இக்கலையில், தினைப்புனம் காத்தல், கவண் சுழற்றுதல், பறவை விரட்டுதல் போன்ற வேளாண் செயல்கள் அசைவுகளாக மாறுகின்றன. அதாவது ஒரு வேளாண் சமூகத்தின் உழைப்பு அனுபவமே அடிகளாகவும் கைமுத்திரைகளாகவும் மாற்றப்படுகிறது. அண்மையாண்டுகளில் இக்கலை பெருமளவில் மீட்டெடுக்கப்பட்டு, பயிற்சிக் குழுக்களின் வழியாக இளம் பெண்களுக்குக் கடத்தப்படுவது, மரபு நிறுவனமயமாகி மறுவாழ்வு பெறும் ஒரு புதிய சூழலைக் காட்டுகிறது.

6.2 கோலாட்டம்: இடஅறிவும் ஒத்திசைவும்

கோலாட்டத்தில் ஒவ்வொரு கலைஞரும் இரண்டு கோல்களைத் தாமும் அருகிலுள்ளவரும் மாறி மாறித் தட்டும் அமைப்பு உள்ளது. ஒரு தட்டு தவறினால் முழு வட்டமும் தடுமாறும்; எனவே இது இடஅறிவு (spatial awareness), நேரக் கணக்கு, பிறர் அசைவை முன்னறிதல் ஆகிய திறன்களைப் பயிற்றுவிக்கிறது. சில வடிவங்களில் மேலிருந்து தொங்கும் நான்களைப் பின்னிப் பின் விலக்கும் "பின்னல் கோலாட்டம்" உண்டு; இது நெசவு, பின்னல் போன்ற வீட்டுத் தொழில்களின் வடிவ அறிவுடன் தொடர்புடையது.

6.3 முளைப்பாரி: சடங்கில் பதிந்த வேளாண் அறிவு

முளைப்பாரியில் பெண்கள் பலவகை தானியங்களை மண் சட்டிகளில் முளைக்க வைத்து, சில நாட்கள் பராமரித்து, கும்மியுடன் ஊர்வலமாகச் சென்று நீர்நிலையில் கரைக்கின்றனர். இச்சடங்கின் உள்ளே விதையின் முளைத்திறனை அவதானிக்கும் ஒரு நடைமுறை அறிவு உள்ளது என்று நாட்டுப்புறவியலாளர்கள் கருதுகின்றனர்: யாருடைய பாரி செழிப்பாக வளர்கிறது என்பதைக் கவனித்து, வரவிருக்கும்

பட்டத்திற்குரிய விதைகளை மதிப்பிடும் வாய்ப்பு இதில் அடங்கியுள்ளது. இவ்வாறு வழிபாடு, கலை, வேளாண்மை மூன்றும் ஒரே நிகழ்வில் இணைகின்றன.

6.4 உடல்சார் அறிவின் கற்றல் முறை

இக்கலைகளில் கற்றல் "பார்த்தல் → இணைதல் → திருத்தப்படுதல் → தேர்ச்சி → வழிநடத்துதல்" என்ற வரிசையில் நடைபெறுகிறது. சிறுமி வட்டத்தின் வெளியே நின்று பார்க்கிறாள், பின்னர் ஓரத்தில் இணைகிறாள், மூத்தவர்கள் கையைப் பிடித்து அசைவைத் திருத்துகின்றனர், காலப்போக்கில் அவளே முன்பாட்டுக்காரியாகிறாள். இது லேவ்–வெங்கர் (Lave & Wenger, 1991) கூறும் "சட்டபூர்வமான ஓரப் பங்கேற்பிலிருந்து மையப் பங்கேற்புக்கு" நகரும் முறைக்கு நேரடி எடுத்துக்காட்டாகும். இங்கு எந்தக் குறியீடும் எழுதப்படுவதில்லை; அறிவு உடலிலிருந்து உடலுக்குக் கடத்தப்படுகிறது. கானர்டன் (Connerton, 1989) வலியுறுத்துவதுபோல, சமூகங்கள் தங்கள் நினைவை இத்தகைய மீள்நிகழ்வுகளிலும் உடல்பழக்கங்களிலும்தான் காத்துக்கொள்கின்றன.

கோலம் இடுதல் நிகழ்த்துக் கலை அல்லாவிடினும், இதே உடல்சார் கற்றலின் அன்றாட வடிவம். புள்ளிகளை எண்ணி வைத்து, அவற்றைச் சுற்றிக் கோடு இழுக்கும் திறன் கைவிரலின் நுண்ணிய இயக்கத்தையும் கணக்கியல் சமச்சீரமைவையும் ஒருசேரவே வளர்க்கிறது. இங்கும் தாய் மகளுக்கும், மாமியார் மருமகளுக்கும் அறிவைக் கைமாற்றும் அதே தலைமுறைச் சங்கிலி இயங்குகிறது.



Fig 3: தமிழர் மரபில் கதைவழி மற்றும் உடல்சார் கற்றல்

இப்படம் தமிழ்நாட்டுப்புறக் கதைகளின் வழியே குழந்தைகளுக்குக் கிடைக்கும் அறநெறி, சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் பெண்கள் குடும்பத்தை மதிநுட்பத்துடன் காக்கும் முறையை விளக்குகிறது. மேலும், கும்மி, கோலாட்டம், முளைப்பாரி போன்ற நிகழ்த்துக் கலைகள் மூலம் உடலசைவு, கூட்டுணர்வு, விவசாய அறிவு மற்றும்

கணிதச் சிந்தனை எவ்வாறு தலைமுறையாகக் கடத்தப்படுகிறது என்பதையும் இது காட்டுகிறது.

7. தமிழ்ப் பழமொழிகள்: செறிந்த வாழ்வியல் அறிவும் மறுபொருளாக்கமும்

பழமொழி என்பது நீண்ட அனுபவத்தின் சுருக்கம்; ஒரு தலைமுறை பல ஆண்டுகளில் கற்றதை அடுத்த தலைமுறை ஒரு வரியில் பெறுகிறது. மீடர் (Mieder, 2004) பழமொழியைச் "மரபான, சுருக்கமான, நினைவில் நிற்கும் வடிவில் அமைந்த ஞானம்" என்று வரையறுக்கிறார்; தொல்காப்பியம் கூறும் நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை ஆகியவை (பகுதி 3.2) இதனோடு நேராக ஒத்துப்போகின்றன. ஜென்சன் (Jensen, 1897/1993) தொடங்கி கி.வா. ஜகந்நாதன் வரை தொகுக்கப்பட்ட பழமொழித் தொகுப்புகளில் வீடு, உணவு, உறவு, வேளாண்மை ஆகியவை சார்ந்தவை பெரும்பங்கு வகிக்கின்றன — இவை பெண்களின் அன்றாட அறிவுக் களங்கள்.

7.1 அனுபவ அறிவின் சுருக்கம்

பழமொழிகள் ஒரு வீட்டுத் தலைவியின் மேலாண்மைச் சூத்திரங்களாகவும் செயல்படுகின்றன. "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" சிக்கனத்தையும் கணக்குவைத்தலையும், "சிறுதுளி பெருவெள்ளம்" சேமிப்பின் மதிப்பையும், "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" சமையலின் அடிப்படையையும் சுருக்கிச் சொல்கின்றன. "ஆடிப்பட்டம் தேடி விதை" போன்றவை பருவகாலம் பற்றிய வேளாண் அறிவைச் சுமந்துள்ளன; விதை சேமிப்பும் அதன் தேர்வும் பல குடும்பங்களில் பெண்களின் பொறுப்பாக இருந்தது.

7.2 சூழலுக்கேற்ற பயன்பாடு

பழமொழியின் பொருள் அதன் சொற்களில் மட்டும் இல்லை; அது சொல்லப்படும் நேரம், சொல்லுபவர், கேட்பவர் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது (Dundes, 1965). மகள் வீடுகட்ட முனையும்போது தாய் "வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்" என்று சொல்வது எச்சரிக்கையாகவும் இருக்கலாம், தைரியமூட்டலாகவும் இருக்கலாம். எந்தச் சூழலில் எந்தப் பழமொழியைச் சொல்ல வேண்டும் என்பதும் ஒரு அறிவு — இதனை "பழமொழித் திறன்" (proverbial competence) எனலாம். மூத்த பெண்கள் இதில் வல்லவர்களாக மதிக்கப்படுவது, அவர்களின் அறிவுச் செல்வாக்குக்குச் சான்று.

7.3 தலைமுறைகளின் மறுபொருளாக்கம்

பழமொழிகள் நிலையானவை அல்ல; ஒவ்வொரு தலைமுறையும் அவற்றை மீண்டும் பொருள்கொள்கிறது. சில பழமொழிகள் பெண்ணைக் குறைவாகக் காட்டுவதாகவும், ஆணாதிக்க உறவுகளை நிலைநிறுத்துவதாகவும் உள்ளன என்பதை மறுக்க இயலாது. ஆனால் அவற்றின் மீதும் மறுவாசிப்புகள் நடைபெறுகின்றன. "பெண் புத்தி பின் புத்தி" என்பதில் "பின்" என்பதைப் "பின்விளைவை முன்னறியும் அறிவு" என்று பொருள்கொள்ளும் வாசிப்பு பரவலாகச் சொல்லப்படுகிறது. "அடியாத மாடு படியாது" என்ற பழமொழி இன்றைய குழந்தை உளவியல் அறிவு நோக்கில் மறுபரிசீலனை

செய்யப்படுகிறது; “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?” என்பதோ இளம்பருவக் கற்றலின் முக்கியத்துவத்தைக் கூறும் அறிவியல் விளக்கத்துடன் இணைக்கப்படுகிறது. இவ்வாறு பழமொழி ஒரு முடிந்த தீர்ப்பு அன்று; தலைமுறைகளுக்கிடையிலான தொடர் உரையாடல்.

அட்டவணை 2. பெண்களின் அறிவுக் களங்கள் சார்ந்த பழமொழிகளும் அவற்றின் மறுபொருளாக்கமும்

பழமொழி	**அறிவுக் களம்**	**மரபான பொருள்**	**சமகால மறுபொருளாக்கம்**
ஆற்றில் போட்டாலும் அளந்து போடு	வீட்டுப் பொருளாதாரம்	சிக்கனம், கணக்குவைத்தல்	நிதி அறிவு, வளங்களை வீணாக்காமை
ஆடிப்பட்டம் தேடி விதை	வேளாண்மை	பருவம் அறிந்து விதைத்தல்	காலநிலை மாற்றச் சூழலில் பட்டத்தை மறுமதிப்பிடுதல்
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே	சமையல்	சுவையின் அடிப்படை	எந்தச் செயலிலும் அடிப்படையான கூறு இன்றியமையாதது
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?	குழந்தை வளர்ப்பு	இளமையில் ஒழுக்கம்	இளம்பருவக் கற்றலின் முக்கியத்துவம்
அடியாத மாடு படியாது	குழந்தை வளர்ப்பு	தண்டனைவழி ஒழுக்கம்	தண்டனை அல்லாத வழிகாட்டல் நோக்கில் மறுபரிசீலனை
பெண் புத்தி பின் புத்தி	பாலினம், மதிநுட்பம்	பெண்ணின் அறிவைக் குறைத்துச் சொல்வதாகப் பரவலான வாசிப்பு	“பின்விளைவை முன்னறியும் அறிவு” என்ற மறுவாசிப்பு
சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்	கலை, மொழி	பெறும் திறன் பயிற்சியால் வரும்	உடல்சார் கற்றல், திறன்சார் கல்விக்கான சான்று

பழமொழிகளின் வரலாற்று மூலத்தைத் தீர்மானிக்க இயலாத நிலையில், மறுவாசிப்புகளை “மூலப்பொருள்” என்று அல்லாமல், வாய்மொழி மரபின் தொடர் பொருளாக்கச் செயல்பாடாகவே இக்கட்டுரை காண்கிறது.

8. ஒருங்கிணைந்த பகுப்பாய்வு: அறிவு உருவாக்கம்–வெளிப்பாடு–பரிமாற்றம் மாதிரி

நான்கு களங்களும் வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தினாலும், அவை ஒரே அறிவுச் சுழற்சியின் பகுதிகள். ஒவ்வொரு களமும் ஒரு குறிப்பிட்ட அறிவுவகையையும் கற்றல் முறையையும் முன்னிலைப்படுத்துகிறது (அட்டவணை 3); அவை அனைத்தும் ஒரே நான்கு நிலைச் சுழற்சியில் இயங்குகின்றன (படம் 1).

8.1 களங்களின் ஒப்பீடு

அட்டவணை 3. நான்கு களங்களில் அறிவுவகை, ஊடகம், கற்றல் முறை, பரிமாற்ற உறவு

களம்	முதன்மை அறிவுவகை	வெளிப்பாட்டு ஊடகம்	கற்றல் முறை	பரிமாற்ற உறவு
தாலாட்டு	உணர்வுசார் பராமரிப்பு, உறவுமுறை அறிவு	பாடல், ஒலி, தொட்டில் அசைவு	கேட்டல், ஒலிவழி உள்வாங்கல்	தாய்/பாட்டி → குழந்தை; மூத்தவள் → இளம்தாய்
நாட்டுப்புறக் கதை	கதைசார் சிந்தனை, சிக்கல் தீர்ப்பு	வாய்மொழிக் கதைசொல்லல்	கேட்டல், உரையாடல், மறுசொல்லல்	பாட்டி → பேரக் குழந்தைகள்
நிகழ்த்துக் கலை	உடல்சார் செய்முறை அறிவு	அசைவு, தாளம், கூட்டுப் பாடல்	பார்த்தல், ஓரப் பங்கேற்பு, பயிற்சி	மூத்த கலைஞர் → இளம் பெண்கள்
பழமொழி	செறிவான வாழ்வியல் அறிவு	ஒருவரி மொழிவடிவம்	சூழல்சார் பயன்பாடு, விளக்கம்	பெரியோர் → அனைவரும் (உரையாடலின் இடையே)

இவ்வட்டவணை ஒரு முக்கியத் தொடர்ச்சியைக் காட்டுகிறது: குழந்தைப் பருவத்தில் கேட்டல் (தாலாட்டு), சிறுவயதில் உரையாடல் (கதை), இளமையில் உடல்வழிப் பங்கேற்பு (கலை), முதிர்ந்த வயதில் சூழல்சார் பயன்பாடு (பழமொழி) — இவை வாழ்நாளின் வளர்நிலைகளுடன் ஒத்துப்போகின்றன. அதாவது நாட்டுப்புற மரபு வயதுக்கேற்ப அடுக்குக்கல்வியை (graded curriculum) கொண்டுள்ளது.



Fig 4: தமிழர் மரபில் பழமொழிகளின் மறுபொருளாக்கம்

இப்படம் தமிழ்நாட்டுப் பழமொழிகள் காலந்தோறும் எவ்வாறு புதிய பொருள்களைப் பெறுகின்றன என்பதை விளக்குகிறது. 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்பது சிக்கனத்தையும், 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது வேளாண் அறிவையும் குறிக்கிறது. இவை சூழலுக்கு ஏற்பவும், அறிவியல் பார்வையுடன் தலைமுறையாகப் புதிய அர்த்தம் கொள்கின்றன என்பதை இந்தப் படம் படம்பிடித்துக் காட்டுகிறது.

9. சமகாலச் சவால்களும் பாதுகாப்பு வழிகளும்

9.1 சவால்கள்

மரபான தலைமுறைப் பரிமாற்றத்தின் அடிப்படைகள் இன்று வேகமாக மாறுகின்றன. கூட்டுக் குடும்பங்களிலிருந்து தனிக் குடும்பங்களுக்கு மாறியதால் பாட்டிகளும் பேரக் குழந்தைகளும் ஒரே வீட்டில் வாழ்வது குறைந்துள்ளது; திண்ணைக் கதைக்குரிய இடமும் நேரமும் சுருங்கியுள்ளன. தாலாட்டின் இடத்தைத் திரைப்பாடல்களும் கைப்பேசி ஒலிகளும் எடுத்துக்கொண்டுள்ளன.

வேளாண்மையில் இயந்திரமயமாக்கமும் கூட்டு உழைப்பு குறைந்ததும் நடவுப் பாடல், கும்மி போன்ற வடிவங்களின் இயல்பான சூழலை அகற்றியுள்ளன. மறுபுறம், மரபு மேடைக்கலையாகவும் நிகழ்வுப் பொருளாகவும் மாறும்போது (folklorism), அதன் வடிவம் நிலைத்தாலும் அதனுள் இருந்த அனுபவ அறிவு மெல்ல மெல்லக் கரையும் அபாயம் உண்டு. கல்விமுறை எழுத்தறிவையே அறிவாக அங்கீகரிப்பதால், பாட்டியின் அறிவு "மூடநம்பிக்கை" என்று ஒதுக்கப்படும் போக்கும் உள்ளது.

9.2 பாதுகாப்பு வழிகள்

யுனெஸ்கோவின் அரூபப் பண்பாட்டு மரபு உடன்படிக்கை (UNESCO, 2003) வாய்மொழி மரபுகள், நிகழ்த்துக் கலைகள், இயற்கை பற்றிய அறிவு ஆகியவற்றைப் பாதுகாக்க

வேண்டிய மரபுகளாக அங்கீகரிக்கிறது; அதன் மையக் கருத்து மரபை அருங்காட்சியகத்தில் மட்டும் வைப்பது அன்று, அதன் வாழ்வான பரிமாற்றத்தைத் தொடரச் செய்வது. இதன் அடிப்படையில் பின்வரும் வழிகளை இக்கட்டுரை முன்மொழிகிறது:

1. **சமூகப் பங்கேற்புடன் ஆவணப்படுத்தல்** — மூத்த பெண்களை "தகவலாளர்" என்று மட்டுமல்லாமல் இணை ஆய்வாளர்களாகக் கொண்டு, வழக்காறுடன் அதன் சூழல், பயன்பாடு, விளக்கம் ஆகியவற்றையும் பதிவு செய்தல்.
2. **தலைமுறைஇடைப் பட்டறைகள்** — பாட்டிகளும் பேரக் குழந்தைகளும் இணைந்து தாலாட்டு, கதை, கும்மி, கோலம் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ளும் பள்ளி, கல்லூரிநிலைநிகழ்வுகள்.
3. **பாடத்திட்டத்தில் இணைத்தல்** — தேசியக் கல்விக் கொள்கையின் இந்திய அறிவு மரபுப் பாடங்களில் தமிழ் வாய்மொழி வழக்காறுகளையும் பெண்களின் அனுபவ அறிவையும் தனி அலகாகச் சேர்த்தல்.
4. **எண்மவுலகக் காப்பகம்** — ஒலி–ஒளிப் பதிவுகளை மெல்லியலாக்கம், சூழல்க் குறிப்பு, வட்டாரக் குறிச்சொற்கள் ஆகியவற்றுடன் ஒரு திறந்த அணுகல் காப்பகமாகக் கட்டமைத்தல்; சமூகத்தின் ஒப்புதல், உரிமை ஆகியவற்றை மதித்தல்.
5. **விமர்சனப் பாதுகாப்பு** — பாலின ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்தும் கூறுகளைக் கேள்விக்குட்படுத்தி, பெண்களின் அறிவுமுகமையை முன்னிறுத்தும் கூறுகளை வலுப்படுத்தும் தெரிவுசார் பாதுகாப்பு.

10. முடிவுரை

தமிழ் நாட்டுப்புற மரபுகளில் பெண்கள் அறிவை உருவாக்குபவர்களாகவும், வளர்ப்பவர்களாகவும், கடத்துபவர்களாகவும் செயல்படுகின்றனர் என்பதை இக்கட்டுரை நான்கு களங்களின் வழியாகக் காட்டியது. தாலாட்டு பராமரிப்பு, உறவுமுறை, உணர்வு ஒழுங்கமைவு ஆகியவற்றைக் குழந்தையின் முதல் ஆண்டிலேயே தொடங்குகிறது. நாட்டுப்புறக் கதை சிக்கல் தீர்க்கும் உத்திகளைக் கற்பனையில் ஒத்திகை பார்க்கச் செய்கிறது. நிகழ்த்துக் கலை அறிவை உடலில் பதிக்கிறது. பழமொழி அனுபவத்தைச் சுருக்கி, ஒவ்வொரு தலைமுறையும் அதனை மறுபொருள் கொள்ள இடமளிக்கிறது.

இந்நான்கு களங்களும் தனித்தனியானவை அல்ல; ஒரே பெண்ணின் வாழ்நாளில் அவை வரிசையாகவும் ஒன்றையொன்று தாங்கியும் அமைகின்றன. இவற்றை இணைக்கும் "உருவாக்கம் – வெளிப்பாடு – பரிமாற்றம் – மறுபொருளாக்கம்" என்ற சுழற்சி மாதிரி, வாய்மொழியறிவை ஒரு நிலையான செல்வமாக அன்றி, தொடர்ந்து புதுப்பிக்கப்படும் ஒரு செயல்முறையாகக் காண உதவுகிறது. இந்திய அறிவு மரபு பற்றிய உரையாடல் நூல்மரபுடன் நின்றுவிடாமல், தமிழ்ப் பெண்களின் வாய்மொழி, உடல்சார், உறவுசார் அறிவையும் முறையான அறிவுவடிவமாக அங்கீகரிக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் மையமான முடிவு.

மேலாய்வுக்கான பரிந்துரைகள்: (அ) கொங்கு, நாஞ்சில் நாடு, நெல்லை போன்ற வட்டாரங்களின் தாலாட்டுகளை ஒப்பிடும் களஆய்வு; (ஆ) மூன்று தலைமுறைப் பெண்களிடம் ஒரே பழமொழிக்குரிய விளக்கங்களைத் திரட்டி மறுபொருளாக்கத்தை அளவிடுதல்; (இ) வள்ளிக் கும்மி பயிற்சிக் குழுக்களில் உடல்சார் கற்றலின் இனவரைவியல் (ethnographic) ஆய்வு; (ஈ) வாய்மொழி மரபுகளைத் தெரிவு செய்யும் எண்மவுலக் காப்பகங்களின் அறம் சார்ந்த வழிகாட்டுதல்கள்.

11. துணைநூற்பட்டியல்

முதன்மை நூல்கள்

- தொல்காப்பியம் — பொருளதிகாரம், செய்யுளியல்.
- திருவள்ளுவர். திருக்குறள் — கேள்வி அதிகாரம்.

தமிழ் நூல்கள்

1. ஜகந்நாதன், கி. வா. (1958). *மலையருவி*. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்.
2. லூர்து, தே. (1997). *நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள்*. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
3. வானமாமலை, நா. (1964). *தமிழர் நாட்டுப் பாடல்கள்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

ஆங்கில நூல்கள்

References

Bauman, R. (1977). Verbal art as performance. Newbury House.

Belenky, M. F., Clinchy, B. M., Goldberger, N. R., & Tarule, J. M. (1986). Women's ways of knowing: The development of self, voice, and mind. Basic Books.

Bourdieu, P. (1977). Outline of a theory of practice (R. Nice, Trans.). Cambridge University Press.

Bruner, J. (1986). Actual minds, possible worlds. Harvard University Press.

Clark-Decès, I. (2005). No one cries for the dead: Tamil dirges, rowdy songs, and graveyard petitions. University of California Press.

Connerton, P. (1989). How societies remember. Cambridge University Press.

Dundes, A. (Ed.). (1965). The study of folklore. Prentice-Hall.

Jensen, H. (1993). A classified collection of Tamil proverbs. Asian Educational Services. (Original work published 1897)

Lave, J., & Wenger, E. (1991). Situated learning: Legitimate peripheral participation. Cambridge University Press.

Mahadevan, B., Bhat, V. R., & Nagendra Pavana, R. N. (2022). Introduction to Indian knowledge system: Concepts and applications. PHI Learning.

Mieder, W. (2004). Proverbs: A handbook. Greenwood Press.

Ministry of Human Resource Development. (2020). National Education Policy 2020. Government of India.

Polanyi, M. (1966). The tacit dimension. Doubleday.

Ramanujan, A. K. (1991). Toward a counter-system: Women's tales. In A. Appadurai, F. J. Korom, & M. A. Mills (Eds.), Gender, genre, and power in South Asian expressive traditions (pp. 33–55). University of Pennsylvania Press.

Trawick, M. (1990). Notes on love in a Tamil family. University of California Press.

UNESCO. (2003). Convention for the safeguarding of the intangible cultural heritage. UNESCO.

Vygotsky, L. S. (1978). Mind in society: The development of higher psychological processes. Harvard University Press.